இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 04.05.2026

# பிளவுவாத பிரதமர் மோடி!

பிரதமர் மோடிக்கு தெரிந்ததெல்லாம் பிளவுவாதம், பிரிவினை வாதம், வகுப்புவாதம் ஆகியவை மட்டும்தான். அவர் வந்த பாதையும் அதுதான். சென்று கொண்டிருக்கும் பாதையும் அதுதான். அவருக்கு தெரிந்த பாதையும் அதுதான்.

**“தமிழ்நாட்டில் பீகார் மக்களைத் தொடர்ந்து துன்பத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். அத்தகைய தலைவர்களை அழைத்து வந்து பீகாரில் வாக்கு கேட்கிறார்கள்”** என்று பீகாரில் பேசியவர்தான் பிரதமர் மோடி. இப்போது உ.பி.யில் போய் தி.மு.க. மீதான வெறுப்பை உமிழ்ந்துள்ளார்.

உத்தரப்பிரதேசம் மாநிலத்துக்குச் சென்றவர் அங்கே கங்கை விரைவுச் சாலையைத் திறந்து வைத்துள்ளார். திறந்து வைத்தவர், கங்கையைப் பற்றி பேசட்டும். அல்லது தன்னைப் பற்றி பேசட்டும். அங்கும் போய் தி.மு.க.வைப் பற்றித்தான் பேசி இருக்கிறார். அந்தளவுக்கு அவர் தி.மு.க. பயத்தில் இருக்கிறார் என்பது தெரிகிறது.

உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர், மரியாதைக்குரிய முலயாம் சிங் அவர்களின் மகன், சமாஜ்வாதி ஜனதா கட்சியின் தலைவர் அகிலேஷ் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மிக நெருக்கமாக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. **‘உத்தரப் பிரதேசத்துக்கு எதிரான தி.மு.க. போன்ற கட்சிகளுடன் சமாஜ்வாதி கைகோத்து செயல்படுகிறது’** என்று குற்றம் சாட்டி இருக்கிறார் பிரதமர்.

**“சமாஜ்வாதி கட்சியானது வளர்ச்சிக்கு எதிரானது மட்டுமல்ல, பெண்களுக்கும் விரோதமான கட்சி. உத்தர பிரதேசத்தில் இருந்து வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குச் சென்ற அவர்கள், இம்மாநில மக்களை இழிவுபடுத்துபவர்களின் பக்கம் நின்றனர். உத்தரப்பிரதேசத்தின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதை எதிர்க்கும் தி.மு.க.போன்ற கட்சிகளுடன் கைகோர்த்து அதே நிலைப்பாட்டை எதிரொலித்தனர். இத்தகைய அரசியல், சமூகத்தைப் பிளவுபடுத்தி, வளர்ச்சியைத் தடுக்கும் போக்கை பிரதிபலிக்கிறது”** என்று பேசி இருக்கிறார் பிரதமர்.

உத்தரப்பிரதேசத்துக்கு தொகுதிகளின் எண்ணிக்கை அதிகமாகி விடுவதை தி.மு.க. எதிர்த்ததா இல்லை. **‘எந்த மாநிலத்துக்கும் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகமாவதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் எங்களுக்கு ஏன் குறைக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறோம்’** என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ‘உத்தரப்பிரதேசத்தின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதை எதிர்க்கும் தி.மு.க.’ என்று பொய்க்கதை கட்டுகிறார்.

பெண்களுக்கு தொகுதிகளை அதிகரிக்கப் போகிறோம் என்ற போர்வையில், தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வந்தார் பிரதமர். உண்மையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவில் பிரதமருக்கு அக்கறை இருக்குமானால் 2024 ஆம் ஆண்டு தேர்தலிலேயே அதனை அவரால் நிறைவேற்றி இருக்க முடியும். மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு, தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு என்று அதனை 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகு செய்யப் போவதாகத் தள்ளிப் போட்டவர் பிரதமர் மோடிதான்.

மகளிருக்கு இடஒதுக்கீடு தருவதில் பிரதமர் மோடிக்கு உண்மையில் அக்கறை இல்லை. இருந்திருந்தால் இப்போது இருக்கும் தொகுதிகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவதை எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லையே! பா.ஜ.க.வின் பிதாமகர்களான ஆர்.எஸ்.எஸ். வேண்டுமானால் மகளிருக்கான இடஒதுக்கீட்டை மறுக்கலாமே தவிர, வேறு யாரும் எதிர்க்கப் போவது இல்லை. எனவேதான் நாடாளுமன்றத்தை நாடக மேடையாக ஆக்கி ஏமாற்றி வருகிறார் பிரதமர். மக்கள் மன்றத்தையும் நாடக மேடையாக ஆக்கி வருகிறார்.

நாடாளுமன்றத்தில் அகிலேஷ் அவர்கள் பேசியதை பிரதமர் முழுமையாக அறியவில்லை போலும். ஏனென்றால் விவாதம் நடக்கும் போது பிரதமர் அவைக்கு வரவே இல்லை.

**“பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதாவை அவசர அவசரமாக ஏன் அறிமுகம் செய்கிறீர்கள்? இப்போது மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கப்பட்டு விட்டது. நாங்கள் ஜாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பையும் சேர்த்து கேட்டோம். ஆனால் மிகத் தந்திரமாக அதை தவிர்த்து விட்டீர்கள். மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தால், ஜாதி ரீதியான கணக்கெடுப்பு அதன் அடிப்படையிலான இடஒதுக்கீடு என்பது போன்ற கோரிக்கைகள் எழும். இவை அனைத்தும் பா.ஜ.க.வுக்கு எதிரான கொள்கைகள். அதற்காகவே மக்கள் தொகைக் கணக்கெடுப்பை தாமதப்படுத்தி, அதன் முடிவு வருவதற்குள் பெண்கள் இடஒதுக்கீடு மசோதா அவசர அவசரமாக தாக்கல் செய்யப்படுகிறது. நீங்கள் மக்களை ஏமாற்றப் பார்க்கிறீர்கள். கொள்கையளவில் பெண்கள் இடஒதுக்கீட்டை முழுமனத்துடன் ஆதரிக்கிறோம். அதே நேரம், தொகுதி மறுவரையறை மூலம் அதைச் செயல்படுத்துவதை எதிர்க்கிறோம்”** என்று தெளிவாகப் பேசினார் அகிலேஷ்.

உத்தரப்பிரதேச மாநிலத்துக்கு எதிராக தி.மு.க.வும் பேசவில்லை. மகளிர் மசோதாவுக்கு எதிராக அகிலேஷும் பேசவில்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பு, ஜாதிவாரி கணக்கெடுப்பு முடிந்த பிறகு அனைத்தையும் செய்யுங்கள் என்றுதான் அகிலேஷும் பேசினார். இவை அனைத்தையும் மறைத்து பேசுகிறார் பிரதமர்.

**“தமிழ்நாட்டுக்கு தொகுதிகள் குறையாது, இதை தமிழில் எப்படிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் அதையும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்”** என்று நாடாளுமன்றத்தில் நல்ல பிள்ளையைப் போல சொன்ன பிரதமர், ‘உத்தரப்பிரதேசத்துக்கு பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுவதை எதிர்க்கும் தி.மு.க.’ என்று எதற்காக உத்தரப்பிரதேசத்தில் போய் பேச வேண்டும்? ‘உத்தரப்பிரதேசத்துக்கு கூடுதல் தொகுதிகளை நான் ஒதுக்க நினைத்தேன்’ என்று அங்கு போய் பேசுவது பச்சை சந்தர்ப்பவாதம் அல்லவா? **நாடாளுமன்றத்தில் பேசியது நிஜ மோடியா? உ.பி.யில் பேசுவது நிஜ மோடியா? உண்மையில் அவர் மோசடி மோடி. அவ்வளவுதான்.**

## பி.இ., பி.டெக் படிப்புகளுக்கு

# ஆன்லைன் விண்ணப்பப் பதிவு!

### ஜூன் 2 வரை விண்ணப்பிக்கலாம்!

சென்னை, மே. 4-

பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்கான தேர்வு முடிவுகள் விரைவில் வெளியாக உள்ளது. இப்போது இருந்து மேற்படிப்புகள் தொடர்பாக பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்கள் ஆயத்தமாகி வருகின்றனர். இந்நிலையில் பி.இ. மற்றும் பி.டெக் விண்ணப்பப் பதிவு ஆன்லைனில் தொடங்கியுள்ளது.

மாணவர்கள் இதற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள www.tneaonline.org என்ற இணையதளத்தின் வாயிலாகத் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். அரசு ஒதுக்கீடு இடங்களில் சேர்வதற்கான கலந்தாய்வில் பங்கேற்க இன்று முதல் ஜூன் 2 வரை விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் பதிவின் போது மாணவர்கள் தங்களின் அடிப்படை விவரங்கள், மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் சாதிச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களை மின்வருடல் (Scan) செய்து பதிவேற்ற வேண்டும். இணையதள வசதி இல்லாத மாணவர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 110 பொறியியல் சேர்க்கை மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1800 425 0110, theacare@gmail.com மூலம் சந்தேகங்களை நிவர்த்தி செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் பதிவு முடிந்தவுடன் மாணவர்களின் கட் ஆஃப் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு, அதன் பின்னரே இணையவழி கலந்தாய்வு (Online Counselling) பல்வேறு சுற்றுகளாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!



அடிக்கிற காற்றில் காக்கையும்
பறக்கும் காகிதமும் பறக்கும்,
காற்று நின்றால் தான் தெரியும்
எது பறவை எது காகிதம் என்று!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.5.2026) அவரது இல்லத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன், கணவர் செ.சந்திரசேகர் இ.கா.ப. (ஓய்வு) ஆகியோர் சந்தித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.5.2026), சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், மாநில இலக்கிய அணித் தலைவர் அ.அன்வர்ராஜா. திருப்பூர் தெற்கு தொகுதி வேட்பாளர் தினேஷ்குமார் ஆகியோர் நேரில் சந்தித்தனர்.



திருவண்ணாமலை மாநகராட்சி, மேலத்திக்கான், கரியாஞ்செட்டி ஏரிக்கரையினை உயர்த்தவும், தூர்வாரி புனரமைப்பு செய்வது சம்பந்தமாக, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், கு.கணேஷ், துரை. வெங்கட் உட்பட பலர் உள்ளனர்.


# கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினுடன்

# அமைச்சர் – கழக கூட்டணி வேட்பாளர்கள் கலந்துரையாடல்!










முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.5.2026), சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக வேட்பாளர்கள் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சாக்கோட்டை அன்பழகன், மடத்துக்குளம் ஜெயராமகிருஷ்ணன், தாராபுரம் டாக்டர் இந்திராணி, வீரபாண்டி டாக்டர் ஆ.கா.தருண் மற்றும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவருமான கு.செல்வப்பெருந்தகை, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் வேட்பாளர்களான அக்கட்சி பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நித்தியானந்தம் ஆகியோர் நேரில் சந்தித்தனர். அதுபோது கழக துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா,எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.